| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>வளர்மதி | அ.வ.எண். 95/2023 | 15.07.2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பிரதிவாதி என்னை தொந்தரவு செய்யக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு விவரம் சொன்னது யார் என்றால் நான் தான் சொன்னேன். உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் சொல்லியுள்ள லெனின் என்பவர் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் ரியல் எஸ்டேட் மூலம் தெரியும். பிரதிவாதிகளை எப்படி தெரியும் என்றால் அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் என்றால் நம்பர் 1 டோல்கேட். அங்கு எத்தனை வருடமாக இருந்து வருகிறீர்கள் என்றால் கடந்த 4 வருடமாக இருந்து வருகிறேன்.

2) பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழககுரையின் விவரம் பற்றி தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். நீங்கள் தற்போது எங்கு வேலை பார்த்து வருகிறீர்கள் என்றால் நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அதற்கு முன்பு என்ன வேலை பார்த்தீர்கள் என்றால் 2011 – 2016 கவுன்சிலராக இருந்தேன். எந்த கட்சியின் சார்பாக கவுன்சிலராக இருந்தீர்கள் என்றால் அ.இ.அ.தி.மு.க கட்சியின் சார்பாக இருந்தேன். பிரதிவாதிகள் லெனினிடம் எங்கு, எந்த தேதியில் பணம் கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் பணம் கொடுத்த விவரம் உங்களுக்கு எப்போது தெரிய வந்தது என்றால் இரண்டு, மூன்று வருடம் கழித்து தெரியவந்தது. பிரதிவாதிகள் உங்கள் வீட்டிற்கு வந்து எப்போது பிரச்சனை செய்தார்கள் என்றால் 24.06.2022 ம் தேதி.

3) உங்களுடைய இடத்தை வந்து இடைஞ்சல் செய்ததாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தார்கள் அதனால் தாக்கல் செய்துள்ளேன். 2011 – 2016 ம் காலக்கட்டத்தில் நீங்கள் கவுன்சிலராக இருந்த போது அப்போது இருந்து அமைச்சரிடம் சொல்லி வேலை வாங்கி தருவதாக பிரதிவாதிகளிடம் பணம் வாங்கியுள்ளீர்கள் என்றால் இல்லை. பொதுவாக ஒருவர் ஒருவரிடம் பணம் கொடுத்தால் அவரிடம் தான் கேட்பார்கள் என்றால் சரிதான். பணம் வாங்கியவர் இறந்துவிட்டால் அவருடைய வாரிசுகளிடம் தான் பணம் கேட்பார்கள் என்றால் சரிதான். லெனின் உங்கள் மூலமாக தான் பிரதிவாதிகளுக்கு அறிமுகம் ஆனார் என்றாலும், உங்களிடம் தான் பிரதிவாதிகள் பணம் கொடுத்தார்கள் என்றால் இல்லை.

4) 2 ம் பிரதிவாதிக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் வேலை வாங்கி தருவதாக சொல்லி பணம் வாங்கியுள்ளீர்கள் என்றால் இல்லை. அந்த காலக்கட்டத்தில் உயர் கல்வி துறை அமைச்சராக இருந்தவருக்கு நீங்கள் கடிதம் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டில் எனது லெட்டர் பேடில் கையொப்பம் போட்டு வைத்திருப்பேன். பிரதிவாதிகள் அதனை எடுத்து தவறாக பயன்படுத்தியுள்ளார்கள். நீங்கள் எதற்காக லெட்டர் பேடில் கையொப்பம் போட்டு வைத்திருப்பீர்கள் என்றால் நான் அடிக்கடி வெளியூருக்கு செல்வதால் என்னை பார்க்க வரும் நபர்கள் கேட்பார்கள் என்பதால் நான் கையொப்பம் போட்டு வைத்திருப்பேன். பிரதிவாதிகளுக்கு நான் என் கையால் கொடுக்கவில்லை. லெட்டர் பேடில் கையொப்பம் போட்டு வைத்திருந்தது காணாமல் போனது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுத்தீர்களா என்றால் நிறைய வைத்திருந்ததால் காணாமல் போனது எனக்கு தெரியாததால் புகார் கொடுக்கவில்லை.

5) நீங்கள் லெட்டர் பேடில் கையொப்பம் மட்டும் செய்து வைத்திருப்பீர்களா அல்லது விவரங்கள் எழுதி வைத்திருப்பீர்களா என்றால் நான் வீட்டில் இருந்தால் எழுதி கையொப்பம் போட்டு கொடுப்பேன். தெரிந்தவர்களாக இருந்தால் நான் வெளியே இருந்தால் அருகில் உள்ளவரிடம் சொல்லி எழுதி கொடுக்க சொல்வேன். பிரதிவாதிகள் உங்களுடைய லெட்டர் பேடை தவறாக பயன்படுத்தியது எப்போது தெரியவந்தது என்றால் 2022 க்கு பின்னர் தெரியவந்தது. நீங்கள் இந்த வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்தீர்கள் என்றால் 2023 ல் தாக்கல் செய்தேன். உங்களுடைய வழக்கில் பிரதிவாதிகள் உங்களுடைய கையொப்பத்தை தவறாக பயன்படுத்தியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் கவுன்சிலராக இருந்த காலக்கட்டத்தில் முடியாதவர்களுக்கு சொல்லி வேலை வாங்கி கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 01.08.2025 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.